முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 391/2017

அரசுதரப்பு 1 -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துநாயகம் | வயது | : | 63 |
| தந்தை/கணவர் பெயர் | : | முத்தையன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

சட்டம் 44/1969-ன் விதிமுறைகளின் படி 27.09.2021 -ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன். நான் சிதம்பரம் வட்டம் கூத்தங்கோயில் கிராமத்தில் 2014 வருடத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன். கூடுதல் பொறுப்பாக உசூப்பூர் கிராம நிர்வாக அலுவலராக இருந்தேன். 2014 ஆம் வருடம் வெடிகுண்டு வெடித்த சத்தம் கேட்டதாக கிராம உதவியாளர் செல்லதுரை சொன்னதின் அடிப்படையில் மாரியப்பா நகர் பக்கம் சத்தம் வந்த திசையில் சென்றோம். சிதம்பரம் அண்ணாமலை நகர் மாரியப்பா நகரில் 2வது தெருவில் மேற்படி வெடிகுண்டு வெடித்ததாக சத்தம்கேட்டு நானும், உதவியாளரும் போனோம். நான் அங்கு போகும்போது வீட்டு நம்பர் தெரியவில்லை. காவல்துறையினரும் அங்கு

வந்திருந்தார்கள். காவல்துறையினர் சோதனை யிட்டார்கள். நாங்கள் வெளியில் இருந்தோம். அங்கு மகசர் தயாரித்தார்கள். வெடிகுண்டு வெடித்து ஜன்னல்கள் உடைந்து இருந்தது. இரத்தக்கறைகள் இருந்தது. அங்கு என்னென்ன பொருட்கள் இருந்தது என்று ஞாபகமில்லை. நான்தான் புகார் எழுதி கொடுத்தேன். நான் எழுதிய புகார் அசாஆ. 1 ஆகும். மகசர் தயாரித்தார்கள். எந்த பொருட்களை கைப்பற்றினார்கள் என்று ஞாபகமில்லை. புகார் கொடுத்தது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி பிறழ்சாட்சியாக மாறியதால் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் கடந்த 03.05.2014 அன்று காலை 10.45 மணிக்கு செல்லதுரை என்னை செல்போனில் அழைத்து மாரியப்பா நகர் 2வது தெற்கு குறுக்கு சாலையில் கதவிலக்கம். 311ல் பன்னீர் செல்வம் என்பவர் வீட்டின் கீழ்புற தரைபோர்ஷனில் வசிக்கும் வீட்டில் காலை 10.30 மணிக்கு வெடிசத்தம் கேட்டதாக தகவல் வந்ததின்பேரில் நானும், உதவியாளரும் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றும், அங்கு பொதுமக்கள் குண்டு வெடித்து விட்டது என்று கூறி அங்குமிங்கும் ஓடி கொண்டிருந்ததாகவும், என்னையும், கிராம உதவியாளரிடமும் காவல்துறைக்கு தகவல் சொன்னதாகவும், நான் அந்த வீட்டில் சென்று பார்த்தபோது அங்கு யாரும் இல்லை என்றும், அறை முழுவதும் இரத்தக்கறை, வெடித்த மருந்து இரத்தக்கறைகளுடன் வீட்டு பொருட்கள் ஜன்னல் கண்ணாடி உடைந்து இருந்தது என்றும், மேற்குபக்க சுவரில் விரிசல் ஏற்பட்டிருந்தது

என்றும், சம்பவ அறையில் ஒரு கைத்துப்பாக்கி, 4 வீச்சருவாள், 1 கறி வெட்டும்கத்தி, 1 பிச்சுவா கத்தி, 1 இரும்பு ராடு, பயன்படுத்திய தோட்டாக்கள், பயன்படுத்தாத தோட்டாக்கள், ஒரு வெடிக்காத வெடிகுண்டு, அருள்பிரசாத் என்பவரின் அண்ணாமலை பல்கலை கழக ஊழியர் ஐடி கார்டு, மோகன்ராம், சங்கர்லால் ஆகியோரது பான் கார்டு, ராஜேஷ்கண்ணன் என்பவரது பார் கவுன்சில் ஐடி, பாஸ்கரன் என்பவரின் ஓட்டர் ஐடி, ஆகியவைகள் கிடந்தன என்றும், இந்த சம்பவம் தொடர்பாக பக்கத்து வீட்டில் வசிக்கும் சுரேஷ், ரமேஷ், நெடுமாறன் ஆகியோரை விசாரித்ததாகவும், அருள் வீட்டில் இருந்த மோகன்ராம் என்பவருக்கு வெடித்ததால் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், உடன் இருந்த அருள், சுரேந்தர், சத்யா, சந்தோஷ், பட்டாபி ஆகியோர் காயம்பட்ட மோகன்ராமை ஆட்டோவில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், மோகன்ராம், நடராஜன் என்பவர்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக கேள்விப்பட்டோம் என்றும், இதுசம்மந்தமாக சம்பவ இடம் வந்து பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் ஆகியவற்றில் கையெழுத்து செய்தோம் என்றும், சம்பவ இடத்தில் இருந்து 4 வீச்சருவாள், 1 கைத்துப்பாக்கி, ஒரு வெடிக்காத குண்டு, 1 இரும்பு ராடு, கறி வெட்டும் கத்தி, பிச்சுவா கத்தி, பயன் படுத்திய மற்றும் பயன்படுத்தாத தோட்டாக்கள், ஆணிகள், பால்ரஸ்கள் மற்றும் அருள்பிரசாத் என்பவரது ஐடி கார்டு, மோகன்ராம், சங்கர்லால் பான்கார்டு, ராஜேஷ்கண்ணன் என்பவரது பார் கவுன்சில் ஐடி கார்டு, பாஸ்கரனின் ஓட்டர் ஐடி கார்டு மற்றும், வீட்டின் பின்பக்கம் எரிந்த நிலையில் இருந்த வெடியின் பேப்பர் குளங்கள், எரிந்த நிலையில் கண்ணாடி பாட்டில் ஒன்று, எரிந்த கரி துகள்கள் ஆகியவற்றை மகசரில் கைப்பற்றியபோது நானும் கிராம உதவியாளர் செல்லதுரையும் சாட்சி

கையெழுத்திட்டோம் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பார்வைமகசரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அசாஆ. 2 ஆகும். கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து மட்டும் அசாஆ. 3 ஆகும். அதிலுள்ள மற்றொரு கையெழுத்து அசாஆ. 4 ஆகும்.

1, 10வதுஎதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - மாரியப்பா நகருக்கும், உசூப்பூர் கிராமத்திற்கும் 2 கிமீ தூரம்இருக்கும். அன்று விடுமுறை நாளா என்று நினைவில் இல்லை. எனக்கு தகவல் கிடைத்து கால்மணி நேரத்தில் அங்கு போய் இருப்போம். நான் போவதற்கு முன்பே அண்ணாமலை நகர் காவல்நிலையத்திலிருந்து ஆய்வாளர் மறறும் காவலர்கள் இருந்தார்கள். போலிசார் யாரையும் உள்ளே விடவில்லை. அந்த நேரத்தில் நான் உள்ளேன் போகவில்லை. உள்ளே என்ன இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் சொல்லியதை நான் எழுதி கொடுத்தேன். (அசாஆ.1 புகார்) போலிசார் கொடுதத பேப்பரில் நான் படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். நான் போவதற்கு முன்பே போலிசார் இருந்த விவரம் எனக்கு தெரியாது. குண்டு வெடித்த சத்தம் கேட்ட நேரம் என்ன என்று எனக்கு தெரியாது. பார்வை மகசரில் படித்து பார்த்து கையெழுத்து செய்தேன் என்றாலும், பின்னிட்டு காவல்நிலையத்தில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன்.

12வதுஎதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - 12 எதிரிக்கு மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 391/2014

அரசுதரப்பு 2 -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நெடுமாறன் | வயது | : | 44 |
| தந்தை/கணவர் பெயர் | : | ஜெயபால் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | சிதம்பரம் | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

சட்டம் 44/1969-ன் விதிமுறைகளின் படி 27.09.2021 -ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது எண்.300, 3வது தெற்கு குறுக்கு தெரு, மாரியப்பா நகரில் குடியிருக்கிறேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ்சாட்சியாக மாறியதால் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் மாரியப்பா நகர் 2வது தெற்கு குறுக்கு தெரு கதவிலக்கம் 311ல் ஓய்வு பெற்ற பேராசிரியர் பன்னீர்செல்வம் வீட்டில் தரைதளத்தில் மேற்கு பக்கத்தில் ஏழுமாதங்களாக என் குடும்பத்தோடு குடியிருந்து வருகிறேன் என்றும், அண்ணாமலை பல்கலை

கழகத்தில் உழவியல் துறையில் வேலை பார்த்து வருகிறேன் என்றும், கடந்த 03.05.2014 அன்று காலை 10.30 மணிக்கு வீட்டிலிருந்தபோது என் வீட்டிற்கு கிழக்கு பக்கத்தில் பலத்த வெடி சத்தம் கேட்டது என்றும், வெளியில் வந்து பார்க்கும்போது மாடியில் குடியிருக்கும் சுரேஷ், ரமேஷ் சத்தம் கேட்டு ஓடி வந்தார்கள் என்றும், நாங்கள் 3 பேரும் ஒன்றாக சேர்ந்து வெடிசத்தம் கேட்ட வீட்டிற்கு சென்று பார்த்தோம் என்றும், அங்கு துணி சிதறி கிடந்தது என்றும், இரத்தம் சிதறி கிடந்தது என்றும், கரும்புகை கொண்டிருந்தது என்றும், வெடிமருந்து நாற்றம் அடித்தது என்றும், படுக்கை அறையை பார்த்தபோது ஒரு கைத்துப்பாக்கி, 4 வீச்சருவாள், 1 பிச்சுவா கத்தி, 1 இரும்பு ராடு, 1 கறி வெட்டும் கத்தி, துப்பாக்கி குண்டுகள் சிதறி கிடந்தன என்றும், அருள்பிரசாத் என்ற யுனிவர்சிடி ஐடி கார்டு ஒன்றும், மோகன்ராம் சங்கர்லால் பான்கார்டுகள், ராஜேஷ் என்பவரின் பார் கவுன்சில் ஐடி கார்டு, பாஸ்கர் என்பவரது ஓட்டர் ஐடி சிதறி கிடந்தது என்றும், அந்த வீட்டிற்கு நிறைய பேர் அடிக்கடி வருவார்கள் என்றும், நிறைய கார்களும், இருசக்கரவாகனங்களும் வந்து போகும் என்றும்., நிறைய நேரம் சேர்ந்து பேசிக்கொண்டு டிவி பார்த்து கொண்டிருப்பார்கள் என்றும், நாங்கள் வீட்டில் பார்த்து கொண்டிருக்கும்போது தெருவில் உள்ள 6, 7 பேர்கள் வெடிசத்தம் வந்தது என்று சத்தம்போட்டு பேசினார்கள் என்றும், அவர்கள் மோகன்ராமுக்குவெடி வெடித்து அடிப்பட்டது என்றும், காயம்பட்ட மோகன்ராமை அவருடன் இருந்த அருள்பிரசாத், சுரேந்தர், சத்யா, சந்தோஷ், பட்டாபி ஆகியோர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு ஆட்டோவில் அழைத்து கொண்டு போனார்கள் என்றும், , போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1, 10வதுஎதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை

12வதுஎதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 391/2017

அரசுதரப்பு 3 -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுரேஷ் | வயது | : | 44 |
| தந்தை/கணவர் பெயர் | : | குப்புசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலுக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

சட்டம் 44/1969-ன் விதிமுறைகளின் படி 27.09.2021 -ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது எண்.240, 3வது குறுக்கு தெரு, மாரியப்பா நகரில் குடியிருக்கிறேன். சம்பவ காலத்திலும் நான் மேற்சொன்ன விலாசத்தில்தான் குடியிருந்தேன். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ்சாட்சியாக மாறியதால் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் மாரியப்பா

நகர் 2வது தெற்கு குறுக்கு தெரு கதவிலக்கம் 311ல் ஓய்வு பெற்ற பேராசிரியர் பன்னீர்செல்வம் வீட்டில் மாடியில் மேற்கு பக்கத்தில் என் குடும்பத்தோடு குடியிருந்து வருகிறேன் என்றும், அண்ணாமலை பல்கலை கழகத்தில் பைப் லைன் பிட்டராக வேலை பார்த்து வருகிறேன் என்றும், கடந்த 03.05.2014 அன்று காலை 10.30 மணிக்கு வீட்டிலிருந்தபோது என் வீட்டிற்கு கிழக்கு பக்கத்தில் பலத்த வெடி சத்தம் கேட்டது என்றும், வெளியில் வந்து பார்க்கும்போது தரைதளத்தில் குடியிருக்கும் நெடுமாறன், மாடியில் குடியிருக்கும் ரமேஷ் சத்தம் கேட்டு ஓடி வந்தார்கள் என்றும், நாங்கள் 3 பேரும் ஒன்றாக சேர்ந்து வெடிசத்தம் கேட்ட வீட்டிற்கு சென்று பார்த்தோம் என்றும், அங்கு துணி சிதறி கிடந்தது என்றும், இரத்தம் சிதறி கிடந்தது என்றும், கரும்புகை கொண்டிருந்தது என்றும், வெடிமருந்து நாற்றம் அடித்தது என்றும், படுக்கை அறையை பார்த்தபோது ஒரு கைத்துப்பாக்கி, 4 வீச்சருவாள், 1 பிச்சுவா கத்தி, 1 இரும்பு ராடு, 1 கறி வெட்டும் கத்தி, துப்பாக்கி குண்டுகள் சிதறி கிடந்தன என்றும், அருள்பிரசாத் என்ற யுனிவர்சிடி ஐடி கார்டு ஒன்றும், மோகன்ராம் சங்கர்லால் பான்கார்டுகள், ராஜேஷ் என்பவரின் பார் கவுன்சில் ஐடி கார்டு, பாஸ்கர் என்பவரது ஓட்டர் ஐடி சிதறி கிடந்தது என்றும், அந்த வீட்டிற்கு நிறைய பேர் அடிக்கடி வருவார்கள் என்றும், நிறைய கார்களும், இருசக்கரவாகனங்களும் வந்து போகும் என்றும்., நிறைய நேரம் சேர்ந்து பேசிக்கொண்டு டிவி பார்த்து கொண்டிருப்பார்கள் என்றும், நாங்கள் வீட்டில் பார்த்து கொண்டிருக்கும்போது தெருவில் உள்ள 6, 7 பேர்கள் வெடிசத்தம் வந்தது என்று சத்தம்போட்டு பேசினார்கள் என்றும், அவர்கள் மோகன்ராமுக்கு வெடி வெடித்து அடிப்பட்டது என்றும், காயம்பட்ட மோகன்ராமை அவருடன் இருந்த அருள்பிரசாத், சுரேந்தர், சத்யா, சந்தோஷ், பட்டாபி ஆகியோர்

மருத்துவமனையில் சிகிச்சைக்கு ஆட்டோவில் அழைத்து கொண்டு போனார்கள் என்றும், , போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1, 10வதுஎதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை

12வதுஎதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.